தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1981 மார்ச் 4.

மாசி 21, ரௌத்திரி– திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு''

முகம் மட்டும் மலரும்படியாக நட்பு செய்வது நட்பன்று. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சூரிய வெப்ப மின் உற்பத்தி நிலையங்கள்.

* வினா எண். 356 — திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய வெப்ப மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க மின் வாரியம் திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், இந்தியாவிலேயே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருப்பதைப் போக்குவதற்கு, அயல்நாடுகளில் இதுபோன்ற ஒரு ஆராய்ச்சி செய்து, அங்கேயெல்லாம் பரீட்சார்த்தமாக தனியார் வீடுகளில்கூட இதை அமைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையிருக்கும்போது இதுகுறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் இதற்

கென ஒரு துறையை ஏற்படுத்தி, ஆராய்ச்சி செய்து, தனியார்கள் உபயோகப்படுத்துவதற்கும், அரசு வாரியம் மூலமாகச் செய்வதற்கும் மேலும் ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே மட்டுமல்ல, நம்முடைய நாட்டிலேயும் கூட கல்விக் கழகங்களில் அமைத்திருக்கிறார்கள். சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, 10 கிலோவாட் மின் திறன் கொண்ட சாதனம் ஒன்று சோதனைக்காகவும், செயல் விளக்கம் அளிப்பதற்காகவும் 'பெல்' நிறுவனத்தினரால் 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் புது டெல்லியிலுள்ள விஞ்ஞான தொழில்துறை இலாகாவின் ஒத்துழைப்புடன் சென்னையில் உள்ள ஐ.ஐ.டி.யில் நிறுவப்பட்டது. செயல்முறைத் திட்டம் முடிந்த உடன் இந்தச் சாதனத்தைப் பிரித்தெடுத்துவிட்டார்கள். எனினும் 'பெல்' நிறுவனம் சூரிய வெப்பத்தில் இயங்கும் ஜெனரேட்டர் அமைப்பினை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது.

அதேபோல, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேகூட சூரிய வெப்பத்திலிருந்து சக்தியை எடுத்து எவ்வாறு பயன்படுத்தலாம் என்று அவர்களும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து மின்சார வாரியம் தனியாக ஒரு அமைப்பு உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது தேவையில்லையென்று கருதுகிறேன். ஏனென்றால், அண்மையில் நமது பாரதப் பிரதமர் அவர்கள் கூட இதுகுறித்து குறிப்பிடுகிறபொழுது, a Commission on alternative energy sources அதாவது, இப்பொழுதுள்ள அனல், நீர் மின் நிலையங்களுக்கு மாறாக, மாற்று வகைகளில் எப்படி மின் வசதியைப் பெருக்கலாம் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசே ஒரு கமிஷனை ஏற்படுத்தும் யோசனை உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சி நமக்கும் பலன் அளிக்கும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, சூரிய வெப்பத்தில் மட்டுமல்லாமல் காற்றிலிருந்தும் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதுகுறித்து ஏதாகிலும் தகவலை அரசு சேகரித்து வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காற்று, கடல் அலை, கடலிலேயிருக்கிற வெப்பத்தின் ஏற்றத் தாழ்வு இவை போன்றவைகளையெல்லாம் சேர்த்துத்தான் alternative souces of energy என்று சொல்கிறோம்.

1981 மார்ச் 4]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாட்டுச் சாணத்தின் மூலமாக இன்றைக்கு சாண வாயு தயாரிப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அப்படியானால் அதன்மூலம் கிடைக்கும் பலன்கள் என்ன என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : alternative sources of energy முதலியன என்று சொன்னேன். அதிலே Bio-gas-ம் அடங்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வெப்பத்தின் அடிப்படையில் Ocean Thermal energy Conversion திட்டத்திற்கு மத்திய அரசுக்கு ரூ. 100 கோடி கேட்டு தமிழக அரசு எழுதியிருக்கிறதே அதுபற்றி மத்திய அரசிடமிருந்து தகவல் ஏதேனும் வந்திருக்கிறதா ? அதைப் பற்றி ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இது சம்பந்தமான அன்னியச் செலாவணியைச் சந்திக்க இயலாது என்று தெரிவித்துவிட்டார்கள். அதோடு மட்டுமல்லாமல், அந்தக் கடலிலே உள்ள வெப்ப ஏற்றத்தாழ்வை வைத்து மின்சாரம் எடுப்பது இன்னும் ஆரம்பக் கட்டத்திலேதான் இருக்கிறது. வளர்ந்த நாடுகளிலே கூட இதை இன்னும் சரியான முறையிலே செயல்படுத்தவில்லை. நாமும் அமெரிக்காவிலே உள்ள General Electric Company என்ற நிறுவனத்தின் துணையுடன் தான் நிறுவுவதாக இருந்தோம். ஆனால், மத்திய அரசு அந்த நிறுவனம் தன்னுடைய பணத்திலேயே இந்த நாட்டிலே இதைச் செய்யலாமேயென்றும், நம்முடைய அன்னியச் செலாவணியை ஏன் வீணாக்க வேண்டுமென்றும் கருத்து தெரிவித்துள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, அணு மின் நிலையம், அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம் இவைகளை எல்லாம் நிறுவ 'ரா-மெட்டீரியல்ஸ்' மற்றும் செலவுகள் ஏராளமாகத் தேவை என்பதால், அது இல்லாத காரணத்தால், சூரிய மின் உற்பத்தி நிலையம் தேவை என்று உலகோரால் சொல்லப்படுகிறது. அந்த வகையில் தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் அம்மாதிரி அமைத்துக் கொள்வதற்கு முன் வந்தால் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் அரசு ஏதாவது செயல் திட்டம் வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்தகைய மின் உற்பத்திக்குச் செலவு அதிகமாகும். தனிப்பட்டவர்கள் இதில் ஈடுபடமுடியாது. ஒரு மாநில அரசே இதிலே ஈடுபட முடியாது என்ற காரணத்தால்தான் மத்திய

அரசு இந்தக் காரியத்தைச் செய்கிறது. ஆகவே, தனிப்பட்டவர்கள் ஏராளமான பணம் செலவழித்து மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு முன் வருவார்களானால் நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மின்சார வாரியம் மேம்பாடு.

*வினா எண் 357—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மின்சார வாரியம் மேம்பாடு குறித்து மைய அரசிடமிருந்து ஏதேனும் குறிப்புகள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) மின் உற்பத்தியைப் பெருக்குதல், மின் திட்டங்களுக்கு வேண்டிய நில ஆர்ஜிதம் செய்தல், நவீன மாற்று கருவிகள் உரிய காலத்தில் தருவித்தல், தகுதியான மூலப்பொருட்களை உபயோகப்படுத்தல், வாரியத்தின் நிதி நிலமை, தொழில்முறை உறவுகளை மேம்படுத்துதல், ஆய்வு செய்ய கண்காணிப்பு குழு மற்றும் நிர்வாகம், தொழிலாளர் முறைப்படுத்தவும் யோசனைகள் கூறப்பட்டுள்ளன.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தை மேம்படுத்துவதற்கான பெயரால் மத்திய அரசின் யோசனைகளை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது நம்முடைய மாநிலத்தின் உரிமைகளைப் பாதிக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறும் யோசனைகளைப் பெறுவதாலேயே மாநில அரசை அது பாதிக்கும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி 'திருக்குறளை' நினைவுபடுத்துவது போல்

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS